# உரை
# அமெரிக்க தூதுவர் அதுல் கெசாப்
# ஜெட்விங் ஹோட்டல்
# யாழ்ப்பாணம்
# 2016- ஆகஸ்ட் 15

யாழ்ப்பாணத்தின் இந்த அழகான, மாலையில் எங்களுடன் இணைந்துகொண்டமைக்கு நன்றி.

நான் முதலில் தெரிவிக்கவுள்ள விடயம், இந்த உச்சரிப்பிற்கு எனக்கு பாராட்டுகள் கிடைக்கப்போகின்றன என்பது எனக்கு தெரியும். வணக்கம். நான் தெரிவிக்கவுள்ள இரண்டாவது முக்கிய விடயம் ஆயுபோவன், நான் தெரிவிக்கவுள்ள மூன்றாவது விடயம் அஸ்ஸலாமு அலைக்கும். ஆனால் முக்கியமாக எனது இதயத்திலிருந்து நான் தெரிவிக்க விரும்புவது எனது இனிய மாலை வணக்கம்.

எனது கௌரவத்திற்குரிய நண்பர், எதிர்கட்சி தலைவர் திரு சம்பந்தன் இங்கு வருகைதந்துள்ளமை குறித்து நான் மிகவும் பெருமிதம் கொள்கிறேன். மேலும் வடமாகாணசபையின் பல உறுப்பினர்கள் இங்குள்ளனர். பாராளுமன்ற உறுப்பினர்கள் உள்ளனர். இங்கு அமெரிக்க தூதரக உறுப்பினர்கள் மற்றும் அமெரிக்காவின் கொனலூலு, ஹவாய், லாஸ் வெகாஸ், நெவாடா, கலிபோர்னியா உட்பட பல பகுதிகளில் இருந்து பசுவிக் கட்டளைப் பீடத்தை சேர்ந்தவர்களும் இங்கு வந்துள்ளனர்.

இந்த அழகான யாழ் நகரத்தை பார்ப்பது மகிழ்ச்சியளிக்கின்றது, அதன் தேவாலயங்களை, ஆலயங்களை, அதன் அழகை, அருகிலுள்ள சமுத்திரத்தை பார்ப்பது மகிழ்ச்சியளிக்கின்றது. இலங்கை மக்களுக்கும் அமெரிக்காவிற்கும் என்றென்றும் தொடரும் உறவை கொண்டாடுவது மகிழ்ச்சியளிக்கின்றது.

நண்பர்களே யாழ்ப்பாணத்திற்கும் அமெரிக்காவிற்கும் இடையிலான உறவு 200 வருடங்களிற்கு மேற்பட்டது என்பதை அறியும் போது விசேட மகிழ்ச்சி ஏற்படுகின்றது. 1813ல் அமெரிக்க மிசனரியினரின் வருகையுடன் இந்த உறவு ஏற்படுத்தப்பட்டது. அவர்கள் கல்விக்கான நம்பகத்தன்மை மிக்க ஸ்தாபனங்களை ஏற்படுத்தினர்.

நான் யாழ்ப்பாணத்திற்கு பல முறை விஜயம் செய்துள்ளேன். பல வருட யுத்தத்தின் போது இந்த பகுதி மக்கள் எவ்வாறு துன்பங்களை அனுபவித்துள்ளனர் என்பதை நான் செவிமடுத்துள்ளேன். உண்மையை தெரிவிப்பது, நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் ஆகியன முக்கியமானவை. அதேவேளை இவையாயும் அழிக்கப்பட்ட, இழக்கப்பட்ட உயிர்களை மீண்டும் கொண்டுவராது. எனினும் தற்போது இந்த தேசத்திற்கு கடந்த காலங்களை நினைவுபடுத்திக்கொண்டு எதிர்காலத்தில் கவனம் செலுத்துவதற்கான வாய்ப்பு கிடைத்துள்ளது. இந்த நிகழ்வு எமது மக்களை பிணைக்கும் உறவுகளை மீண்டும் உறுதிப்படுத்திக்கொள்வதற்கான சந்தர்ப்பமாக அமைந்துள்ளது. மேலும் அமெரிக்க தூதரகம் அனைத்து பகுதிகளிலும் உள்ள இலங்கையர்களையும் நோக்கிய நேசக்கரம் நீட்டுதலின் ஒரு பகுதியாகவும் இந்நிகழ்வு அமைந்துள்ளது. நீங்கள் தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்துதல், யுத்த காயங்களை ஆற்றுதல் என்ற அர்த்தபூர்வமான பாதையில் பயணிக்கும் இந்த வேளையில் நாம் உங்களுடன் இணைந்து செயற்படுவோம்.

கௌரவ எதிர்கட்சி தலைவர் திரு சம்பந்தன், அமைச்சர் மனோ கணேசன் மற்றும் முதலமைச்சர் விக்னேஸ்வரன் ஆகியோர் யாழ்ப்பாணத்தில் அமெரிக்க பசுபிக் கட்டளைப்பீடத்தின் பசுபிக்ஏஞ்சல் செயற்திட்டத்தை ஆரம்பித்துவைக்க உதவினர். பெருமளவு அமெரிக்க மருத்துவர்களும் பொறியியலாளர்களும் தங்கள் இலங்கை சகாக்களுடன் இணைந்து பாடசாலைகளையும், நூலகங்க¡யும் திருத்தினர். இந்த மகாணத்தில் உள்ள பல பகுதிகளிற்கு மருத்துவ சேவைகளை வழங்கினர். இடைக்காடு பாடசாலைக்கு இன்று காலை விஜயம் செய்வதற்கான சந்தர்ப்பம் எனக்கு கிடைத்தது. அங்கு அமெரிக்க இராணுவத்தினர் மாலைதீவு, நேபாளம், பங்களாதேஸ் சகாக்களுடன் இணைந்து சிவிலியன் மருத்துவர்கள், தொண்டர்களிற்கு உதவுவதை பார்வையிட்டேன். மருத்துவ வசதி தேவையான மக்களுக்கு இலவசமாக மருத்துவ உதவியை அவர்கள் வழங்கினர். இது நாங்கள் அனைவரும் இணைந்து பணியாற்றினால் எப்படி ஒரு விடயத்தை சாதிக்க முடியும் என்பதை எனக்கு புலப்படுத்தியது.

இலங்கை மக்கள் 2015 இல் இரு தடவை, சமத்துவம், நீதி, வெளிப்படைத் தன்மை மற்றும் வளம் நிலவுகின்ற இலங்கையை ஏற்படுத்துவதற்காக வாக்களித்தனர். அனைத்து இலங்கையர்களும், அவர்களுடைய இன மத வேறுபாட்டை கடந்து சமமாக நடத்தப்படுவதை உறுதிசெய்யும், நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் கொள்கைகளை தங்கள் பாராளுமன்ற பிரதிநிதிகள் உருவாக்குமாறு வலியுறுத்தினர். வெறுமனே 19 மாதங்களில் நாங்கள் இலங்கைக்கு விமர்சனத்துடன் கூடிய விவாதம், சுதந்திர ஊடகம், சுயாதீன சிவில் சமூகம் போன்ற பராம்பரியங்கள் மீண்டும் திரும்பியுள்ளதை; கண்டுள்ளோம்.

இந்த ஆரம்பகட்ட சாதகமான நடவடிக்கைகளிற்கு அப்பால் இலங்கை யுத்தத்திற்கு பிந்திய பல்லின சமூகம் எப்படி சமாதானத்தை ஏற்படுத்த முடியும் என்ற உலக உதாரணமாக மாறுவதற்கு முன்னெடுக்கப்படவேண்டிய பல நடவடிக்கைகள் உள்ளன. இன்னும் எட்டு மாதங்களில் ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் கடந்த வருடம் ஜெனீவாவில் அளிக்கப்பட்ட நல்லிணக்க மற்றும் பொறுப்புக்கூறல் வாக்குறுதிகளை நிறைவேற்றுவதில் ஏற்பட்ட முன்னேற்றத்தை அறிவிப்பார். ஜெனீவாவில் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கு நாங்கள் அரசாங்கத்திற்கு ஆதரவளிக்கின்றோம். நாங்கள் இதற்கு உதவுவோம். இது கடினமான போதும் அவசியமானது, இது இலங்கைக்கும் அதன் வெற்றிக்கும் அவசியமானது.

காணமற்போனவர்களின் குடும்பத்தவர்களிற்கு சான்றிதழ் வழங்குதல், இடம்பெயர்ந்த மக்களிற்கு நிலங்களை மீள்வழங்குதல்போன்ற சாதகமான நடவடிக்களை அரசாங்கம் முன்னெடுத்துள்ளதை நாங்கள் கண்டுள்ளோம். இன்னமும் கேள்விகளுடன் காணப்படும் மக்களிற்கு பதில் அளிப்பதற்காக காணமற்போனோர் குறித்த அலுவலகத்தை அமைப்பதற்கான சட்டமூலத்தை அரசாங்கம் உருவாக்கியதை நாங்கள் பாராட்டியுள்ளோம். இலங்கை அரசாங்கம், உண்மை நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறல்  பொறிமுறைகளை ஏற்படுத்துவது குறித்து அர்ப்பணிப்புடன் உள்ளதை நாங்கள் அறிவோம். யுத்த குற்றங்கள் குறித்து விசாரணைகளை மேற்கொள்ளவும், பயங்கரவாத தடை சட்டத்தை நீக்கவும், பாதுகாப்பு விவகாரங்களுடன் தொடர்புபட்டு இன்னமும் தடுத்துவைக்கப்பட்டுள்ளவர்களை  விடுதலை செய்வதற்கும் அல்லது அவர்கள் மீது குற்றச்சாட்டுகளை சுமத்துவதற்கும், கண்காணிப்பு கலாச்சாரத்தை குறைக்கவும், சிறுபான்மையினத்தவர்களிற்கு எதிரான ஒடுக்குமுறையை முடிவிற்கு கொண்டுவருவதற்கும், மேலதிக நிலங்களை விடுவிக்கவும், நல்லிணக்கத்தை ஊக்குவிக்கவும், நல்லிணக்கம், ஐக்கியம், அமைதி, சமாதானம், வளம் நிலவுகின்ற இலங்கையை ஏற்படுத்தவும்  அரசாங்கம் அர்ப்பணிப்புடன் உள்ளது. யுத்தத்தின் இருண்ட பக்கங்களை முழுமையாக மூட விரும்பினால் இலங்கை அரசாங்கம் மாத்திரம் இந்த பாதையில் தனித்து பயணிக்க முடியாது.

அனைத்து  இலங்கையர்களும் இந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி தங்கள் குரல்கள் செவிமடுக்கப்படுவதை உறுதி செய்ய வெண்டும்.  இன்று காணப்படும் பல கலந்தாய்வு செயலணிகளில் கலந்துகொள்வதன் மூலம் அவர்கள் இதனை செய்யலாம். உதாரணத்திற்கு வலய அளவிலான செயலணிகள் நாடு முமுவதும் இடம்பெறுகின்றன, அவை உங்கள் கருத்துக்கள் மூலம் நன்மை அடையும்.

நல்லிணக்கம் மற்றும் ஐக்கிய தேசம் என்ற இணைந்த தொலைநோக்கில் இலங்கை மக்களுக்கும் அரசாங்கத்திற்கும்ஆ தரவளிக்க அமெரிக்கா தயாராகவுள்ளது, இலங்கை பிரஜைகள் நல்லிணக்கத்திற்கான இந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தருணத்தை பற்றிக்கொள்ளும்போது, நாங்கள் உங்கள் நண்பர்களாகவும், சகாக்களாகவும் தொடர்ந்தும் நீடிப்போம். வளம் பொருந்திய ஐக்கியப்பட்ட, ஜனநாயகமான, வலுவான இலங்கை என்ற கொள்கையை முழு உலகும் பாராட்டுகின்றது. உங்கள் அரசாங்கம் பொருளாதாரத்தை மீளக்கட்டியெழுப்ப, நல்லாட்சியை ஏற்படுத்த, சம உரிமையை ஏற்படுத்த, அபிவிருத்தியின் நன்மைகள் அனைவருக்கும் கிடைப்பதை உறுதிசெய்ய, மேற்கொள்ளும் முயற்சிகளில் உங்கள் அரசாங்கத்துடன் நாங்கள் இணைந்து கொள்கின்றோம்.

எனது உரையை முடித்துக்கொள்ளும் இந்தத் தருணத்தில் உங்கள் அனைவருக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கின்றேன்